சுருக்கம்

தொழில் நுட்பக் கல்வி – அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்புப் பயிலகங்கள் – அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் குழுமம் – ஆசிரியர்களின் திருத்திய ஊதிய விகிதங்கள் 2010 – 1.1.2006 முதல் போதகர் பதவிக்கு திருத்திய ஊதியம் வழங்கி – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வித் (சி2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.388

நாள்: 13.12.2010
கார்த்திகை–27
திருவள்ளுவர் ஆண்டு.2041

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை (நிலை) எண்.126, உயர்கல்வித் துறை, நாள் 28.3.99.
2. அரசு ஆணை (நிலை) எண்.234, நிதி (சம்பளக் குழு) நாள் 1.6.2009
3. அரசு ஆணை (நிலை) எண்.111, உயர்கல்வித் துறை, நாள் 25.5.2010
4. தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண்.41555/ஏ3/2009, நாள் 20.7.2010.

-----

ஆணை:–

அரசாணை எண்.1081, கல்வித் துறை, நாள் 19.8.1989ல் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளிலுள்ள ஆசிரியப் பதவி வரிசையிலிருந்து போதகர் பதவியை நீக்கி இனி வரும் காலத்தில் அப்பதவியில் எவரும் நியமனம் செய்யப்படமாட்டாது என்றும், இவ்வரசாணை வெளியிட்ட நாளில் போதகர்களாகப் பணிபுரிபவர்கள், பி.ஈ. பட்டம் பெற்றவுடன் விரிவுரையாளராக நியமிக்கப்படுவார்கள் என்றும், அது நாள் வரை அவர்கள் போதகர்களாகவே பணிபுரிவார்கள் என்றும் ஆணையிடப்பட்டது. போதகர் பதவியானது அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் ஆசிரியர் பதவியாக உள்ளது.

2. பாலிடெக்னிக் கல்லூரிகளில் ஆசிரியர் பதவியாக உள்ள போதகர் பதவிக்கான ஊதிய விகிதம் 1.1.96 முதல் அரசு ஆணை (நிலை) எண்.126, நாள் 28.3.99இல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் பதவிகளுக்கு வழங்கப்பட்ட 1740–3000 (pre revised) ஊதிய ஏற்ற முறையில் போதகர்களுக்கு ரூ.5500–175–9000 என்று ஊதியம் நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

3. அரசு/அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் தற்போது 8 போதகர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் குழுமத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசு பாலிடெக்னிக் / அரசுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் சிறப்பு பயிலக ஆசிரியர்களின் ஊதிய விகிதங்கள் 1.1.2006 முதல் அரசாணை (நிலை) எண்.111, உயர்கல்வித் துறை, நாள் 25.5.2010ல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளதில் போதகர் பதவிக்குரிய ஊதிய விகிதமான ரூ.5500–175–9000க்கு இணையாக திருத்திய ஊதிய விகிதம் வழங்கப்படாததால் போதகர்களுக்கு ஆசிரியர்களைப் போல் திருத்திய ஊதிய விகிதம் வழங்கப்பட வேண்டியுள்ளது என்றும், அரசாணை (நிலை) எண்.234, நிதி (சம்பளக்குழு), நாள் 01.06.2009ல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் பதவிகளுக்கான ஊதிய விகிதங்கள் 1.1.2006 முதல் ரூ.5500–175–9000க்கு இணையாக ரூ.9300–34800 + தர ஊதியம் 4400 ஊதிய விகிதம் திருத்தியமைக்கப்பட்டதைப் போல ரூ.5500–175–9000 என்ற ஊதிய விகிதத்தில் பாலிடெக்னிக் கல்லூரிகளில் பணிபுரியும் போதகர்களுக்கு 1.1.2006 முதல் திருத்திய

ஊதிய விகிதம் ரூ.9300–34800 + தர ஊதியம் 4400 என்று வழங்கலாம் என்றும், அவ்வாறில்லையெனில் அரசின் நிலையில் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய திருத்திய ஊதிய விகிதம் குறித்து முடிவெடுத்து அதற்குண்டான Fitment Table யை வழங்கும்படியும், 1.1.2007 முதல் அதற்குரிய பணப்பயன் வழங்கும்படியும் தொழில் நுட்பக் கல்வி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் பரிந்துரையை அரசு மிகவும் கவனமுடன் பரிசீலனை செய்து, அரசு / அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களில் பணிபுரியும் போதகர்களுக்கு அரசு ஆணை (நிலை) எண்.234, நிதி (சம்பளக்குழு) நாள் 1.6.2009இல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் பதவிகளுக்கான 5500–175–9000 என்ற ஊதியத்திற்கு இணையான ரூ.9300–34800 + தர ஊதியம் 4400 என்ற திருத்திய ஊதிய விகிதத்தில் ஊதியம் 1.1.2006 முதல் கருத்தியலாகவும் 1.1.2007 முதல் பணப்பயன் பெறும் வகையில் நிர்ணயம் செய்யலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறை அ.சா.எண்.68114/சி.எம்.பி.சி/10, நாள் 02.12.2010 இன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. கணேசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழில் நுட்பக் கல்வி ஆணையர், சென்னை –25.
சட்டக் கல்வி இயக்குநர், சென்னை – 35.
கருவூலம் மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை – 15
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர், சென்னை –108
அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும்
சிறப்புப் பயிலகங்கள் (தொழில் நுட்பக் கல்வி ஆணையர் வழியாக)
மாநில கணக்காயர், சென்னை –18 / 9 மற்றும் மதுரை
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18
ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். காம்ப்ளக்ஸ், சென்னை – 6
ஓய்வூதியம் வழங்கல் அலுவலர், சென்னை– 6
சம்பள கணக்கு அலுவலர், சென்னை (தெற்கு, வடக்கு, கிழக்கு)
தலைவர், அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக்குழுமம், தென்மண்டலம், சென்னை–6
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்,
அனைத்து அங்கீகரிக்கப்பட்ட சங்கம்
நகல்:
உயர்கல்வி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 9
உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை – 9
உயர்கல்வித் (பி, ஐ) துறை, சென்னை–9.
நிதி (சி.எம்.பி.சி)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரிகள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

14/12/10

பிரிவு அலுவலர்.